உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

இராமநாதபுர சமஸ்தானராஜா

ஸ்ரீமது ஹிரண்ய கர்ப்பயாஜி ரவிகுல

முத்து விஜய ரகுநாத மஹாராஜா

பாஸ்கர சேதுபதி பூபாலர்

அவர்கள்மேல்

# அருட்பிரகாச அகவல்.

இஃது

திரிசிரபுரம் சோடச அவதானம்

ஸ்ரீமான் - தீ. க. சுப்பராயச் செட்டியாரவர்கள்

செல்வபுத்திர சிகாமணியாகிய

தி. துரைசாமி செட்டியாரவர்கள்

வேண்டுகோளின்படி

சொர்க்கபுர வாதீனம்

ஸ்ரீமான். திருச்சிற்றம்பல ஞானியார்க்கினியரும்

(கணிதக் கடல்)

சதுரை. வீ. அருணசலப் பிள்ளை அவர்கள்

சற்புத்திரராகிய

ஸ்ரீமான். சிவசிதம்பரப் பிள்ளை யவர்களால்

இயற்றப்பட்டு

சென்னை:

வைஜயந்தி அச்சுயந்திரசாலையில்

அச்சிடப்பட்டது.

1903.



உ

சிவமயம்.

## விநாயகர் வணக்கம்.

பத்தி நீடிய வருட்பிர காசமஃ
தோத்த பேரக வற்குறை யோதவிங்
கத்தி யின்முக னடியிணை யைத்தினம்
சித்தத் திற்றெழு தேத்திச்சிந் திப்பமே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இராமநாதபுர சமஸ்தானராஜா
ஸ்ரீமது ஹிரணிய கர்ப்பயாஜி ரவிகுல
முத்து விஜய ரகுநாத மஹாராஜா
பாஸ்கர சேதுபதி பூபாலர்
அவர்கள்மேல்

# அருட்பிரகாச அகவல்.

நீர்சூழ் புவியிற் பேர்பல வாய்ந்தே
பற்பல வளமு மற்புத மாகத்
தந்துயிர் காக்கு மந்தமி லூர்களின்
மிக்குயர் தென்பாண் டிக்கொரு முக்கிய
நகராய் நாளும் புகரிற் கல்வியிற்
றேர்ந்து ஞான மார்ந்த கடலினிற்
றிளைத்தே காம முளைத்த லாதிய
புன்சழக் கறுத்து மின்சிவ வேட
நண்ணிய முனிவர்க ளெண்ணி வசிக்கு
மடங்களும் வெஞ்சங் கடங்க ளின்றி
ஞான வழிக்கே யான வித்தையைச்

செப்பு மாசா ஹைப்பின் மாணவர்
கூடி மரூஉங் கோடிக முகங்களும்
பசியென் பாரிலா துசித வறுசுவை
யடிசி லூட்டும் படியா மிடங்களும்
வெயிலி லிளைத்துக் கைகாற் சோர்ந்து
வருவார்க் கெல்லாம் பெருமோர் பெய்யு
நீர்ப்பந் தர்களும் சேர்ப்பத் தூண்கட்
கட்டிய மண்டப மெட்டாத் திருமதி
லாதிய வைகளு மேதினிக் கலனுய்த்
தன்னிக ரின்றி மன்னுமி ராம
நாத புரத்திற் ருதா வெனவப்
பதிக்கோர் பதியாய் வதிந்துமுத் தமிழும்
ஐய மறவறிந் துய்யும் படிக்கா
முப்பொரு ளும்பின் செப்பிய நால்வகை
யொழுக்கங் களுமுணர்ந் திழுக்கென வின்றிப்
பூதி மணியணிந் தாதி பரமனுந்
திங்கட் சூடிய கங்கா தரனை
யுள்ளும் புறமு மெள்ளள வேனு
மறவா தெண்ணுந் திறலோ யடியார்
சொற்படி நடக்குங் கற்பகத் தருவே
நால்வகைச் சேனைக ளாற்சூ ழரசே
செற்றல ரில்லா வெற்றிக் கோவே
நற்றவர்க் கான பற்றே முற்றுஞ்
சைவங் காக்கு மெய்யாங் காவல
ரேறே பாவலர் பேறே மணியே
முத்தே முதலாஞ் சத்திய மொழிகட்

கொத்தோய் ஸ்ரீமத் நத்த விரணிய
கற்ப யாஜி யுற்பவ ரவிகுல
முத்து விஜயரகு தத்த நாத
ரோஜா வர்ண ராஜா பாஸ்கர
சேது பதியே சாது நிதியே
பாவா ணர்த்துதி பூபா லகரே.

நும்பால்

வந்தனஞ் செய்து முந்தி வனைத
லென்னெனி லென்று மன்னிய வருளை
யென்மீ திருத்த முன்வேண் டற்பின்
கைலை பரம்பரை யியலா டுதுறை
சுத்தவா தீன வித்துவான் ஸ்ரீமான்
மீனாட்சி சுந்தரக் கோனாட் சிக்கொரு
குற்றமு மின்றிக் கற்றவர் பேரை
யுலகிற் புகழ வலகி னூல்களை
வரிசையொ டியற்றுந் திரிசி ரபுரந்
தேவ சோட சாவ தானத்
தொப்பி லுஞற்றுஞ் சுப்ப ராயச்
செட்டி யார்க்காங் கட்டிக் கரும்பென்
பேர்துணை சாமி யார்வறு மையினாற்
கிட்டா தட்ட வெட்டொடு நாலாம்
பருவத் தொட்டி வருங்காற் றந்தை
யொருபெருங் கடவு டிருவடி சேர்ந்த
வந்நாண் முதலே யிந்நாள் வரையி
லாங்கில பாடையை யோங்கிய காதலாற்
கற்றும் பரிட்சையிற் சற்றுத் தேரு

தூழின் கொடுமையாற் பாழ்வலி யொன்று
லலுவற் சமயம் பெலனை யடக்கி
வரலாற் புத்தக தரஞ்சில விற்கவும்
விற்பனை யின்றிப் பற்பல சிறுமையுட்
பட்டே னலைந்தேன் கெட்டேன் கெடினுந்
தந்தை வைத்த சொந்த வீட்டை
சொற்ப துகையாற் பொற்பாம் பண்டார்
ஏலம் போடுங் கால விளம்பர
மனுப்பப் பன்ரிட மனுப்பல செய்த
வழிக்குந் தங்கையை யொழிக்கும் வதுவை
தனக்குந் தமக்கே கனக்க நின்ற
வள்ளற் பேறை யுள்ளத் தமைத்து
முன்னொரு விசையுநஞ் சன்னி தானம்
வந்துமை யெங்கென முந்திக் கேட்ப
நயினர் கோயிற் பயண மென்ன
மன்னுஜி ராவவர் சொன்னு ரன்றியும்
பிதாவின் காலத் துதார முடனே
சென்னையிற் றம்மை முன்னை கண்டு
சற்றுத் திரவியம் பெற்ற தாகவு
நவநிசி கொலுவி லவசியம் வரவும்
விளம்பிய தாகநீர் விளம்பியு முள்ளார்

ஆகலின்

இற்றை யென்பா லுற்ற திருவிளை
யாடற் புராணவி சேடம் பெற்றுத்
தரிசன மெற்குவி மரிசையிற் காட்டி
வேண்டிய படியே யாண்டவ னருளாற்

றப்பா மற்காட் டப்பாற் பொன்னம்
பலத்தைக் காட்டிப் பெலத்த குறைகளை
நீக்கி யார்க்கும் பாக்கி யாதிய
பசல் செய்தினி விசன மின்றி
வாழச் செய்ய வேழ முகன்முத
லெவரும் போற்று மவராம்
அடியார்க் கெளிய னடியென் முடியரோ!

வாழி—வெண்பா.

வாழ்க விருநிலனும் வல்ல சிவநேயர்
வாழ்க மறையாக மங்களும்—வாழ்க
மதுரையிற் சேதுபதி மன்னனுஞ் சூழ்ந்த
விதுராசற் றத்தினரு மே.

சம்பூரணம்.

৩৭।৯(৭৭৩)
যা. ৯৪৭.

VAIJAYANTI PRESS,
MADRAS.